Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, DECEMBER 5, 2023

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 05, 2023 | ஒளி: 09 கதிர் 142 | பக்கம்:07 | நகரப்பதிப்பு* | Free



# “225 இல் 125 அவுட்”

ஊழல் மோசடியை உத்தியோக பூர்வமாக இந்த அரசாங்கம் அங்கீகரித்துள்ளதால் அடுத்த தேர்தலில் 225 எம்.பி..க்களில் 125 பேர் வீட்டுக்குச் செல்வார்கள் என்று முன்னாள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

எனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தினேன் ஆனால் இதுவரை எனது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்ப டவில்லை என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் குழுநிலை விவாதத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி விவகாரத்தில் நான் அவசரப்பட்டேன் என்று ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள். அரசாங்கம் என்னை வெளியேற்றி விட்டு ஊழல் பக்கம் அமர்ந்துள்ளது. இதுவே உண்மை. ஊழல் மோசடியை உத்தியோக பூர்வமாக இந்த அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. சட்டவாக்கத்துறை கோழையாகிவிட்டது. பல வழிமுறைகளில் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. ஊழலை எடுத்துரைத்ததால் பல்வேறு வழிகளில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளேன். காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி ஆகியோர் கொலை செய்யப்பட்டதை போன்று ரொஷான் ரணசிங்கவுக்கும் நேரலாம். அவ்வாறு நேர்ந்தால் யாரும் பொறுப்புக் கூற போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் 40 ஆண்டுகாலமாக ஒன்றிணைந்து செயற்பட்ட சுதத் சந்திரசிறி குறிப்பிடுகிறார் என்றார்.

# “பிரிக்கும் நோக்கம் பிரபாகரனிடம் இல்லை”



சிங்களவர்களுடன் யுத்தம் செய்து இந்த நாட்டை பிரிக்கும் நோக்கம் பிரபாகரனுக்கு இருக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கின் இந்து வரலாற்றை அழிக்கும் நோக்கமே அவருக்கு இருந்தது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் உயிருடன் இருந்த காலத்தில் சுமந்திரன், பொன்னம்பலம் ஆகியோர் வடக்குக்கு செல்லவில்லை. பிரபாகரன் இன்றும் இருந்திருந்தால் இவர்கள் வடக்குக்கு செல்லமாட்டார்கள். ஆகவே, பாராளுமன்றத்தில் இனவாதத்தை தூண்டிவிடும் கருத்துகளுக்கு இடமளிக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் நீதியமைச்சராக நான் பதவி வகிப்பதையிட்டு வெட்கமடைய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.யான சுமந்திரன் நீதியமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கூறிய கருத்து தற்போதைய பேசுபொருளாகியுள்ளது.

மட்டக்களப்பு பகுதியில் உள்ள பிக்கு ஒருவரின் பெயரை குறிப்பிட்டு அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## யூடியூபில் சம்பாதிக்கும் மோகம் தலைக்கேறியது
# மகளை நிர்வாணமாக படமெடுக்க முயன்ற கணவனை வெட்டிக்கொன்ற மனைவி

தனது 14 வயது மகளை நிர்வாணமாக புகைப்படம் அல்லது வீடியோ எடுத்து அவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்து பணம் தேட முயற்சித்த கணவனை மனைவி வெட்டிக் கொன்ற சம்பவம் குருநாகல், வெல்லவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலை உதவியாளராக பணியாற்றிய 37 வயதுடைய வெல்லவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வீட்டின் குளியலறையில் மறைந்திருந்த கணவன் மீது மனைவி, மிளகாய்ப் பொடியை வீசியதாகவும், மிளகாய்ப் பொடி தாக்குதலுக்கு உள்ளானவர், வெளியே வந்த போது, மனைவி வெட்டிக் கொன்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதலுக்கு இலக்காகி வீட்டின் வரவேற்பறையில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் யூடியூப் சேனலை சமீபத்தில் தொடங்கி, பெண்களின் நிர்வாண புகைப்படங்களை பதிவேற்றம் செய்து, அதை பிரபலப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வந்தது பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்தது.

# “முஸ்லிம் நீதியரசரிடம் ரிஷாட் மன்னிப்பு கோரவேண்டும்”



முஸ்லிம் நீதியரசருக்கு எதிராக ரிஷாத் பதியுதீன் எம்.பி சாபமிட்டது பாரதூரமானது. பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு நீதிபதிகளுக்கு எதிராக இவ்வாறு சாபமிட முடியாது. எனவே, பாராளுமன்றம் ஊடாக அந்த நீதியரசரிடம் ரிஷாத் பதியுதீன் எம்.பி பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தி திங்கட்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்தே இதனை வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2



# சிறுவர்களுக்கு புலி சீருடை அணிந்தமை வெறுக்கத்தக்கது

மாவீரர் தின நிகழ்வில் வடக்கில் சிறுவர்களுக்கு விடுதலைப் புலிகளின் சீருடையை ஒத்த ஆடைகளை அணிவித்து, அவர்களின் கழுத்தில் சைனைட் குப்பிகளை அணிவித்தமை முற்றிலும் வெறுக்கத்தக்க செயற்பாடு என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட குழு நிலை மீதான விவாதத்தில் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் தொடர்பில் மாத்திரம் இந்த சபையில் அதிகம் பேசப்படுகிறது.

தொடர்ச்சி P2

# 50 இலட்சம் பேருக்கு சிவப்பு ‘ஷொக்’



மின் கட்டணத்தை செலுத்த முடியாத 5 இலட்சம் பேரின் மின் இணைப்புக்கள் இதுவரை துண்டிக்கப்பட்டுள்ளதுடன் 50 இலட்சம் பேருக்கு மின் இணைப்பை துண்டிப்பதற்கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை அதிக லாபம் ஈட்டிக்கொண்டே மின் கட்டணம் அதிகரித்தது. எனவே நீர் மின் உற்பத்தி மூலம் இலங்கை மின்சாரசபை பெற்றுவரும் இலாபம் எவ்வளவு என்பதனை சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# வடக்கு தமிழ் இளைஞர்கள் போதையில் அழிய அனுமதி



யுத்தத்தில் எவ்வாறு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டார்களோ அதேபோன்று போதைப்பொருள் பாவனை மூலமும் தமிழ் இளைஞர்கள் அழிவதற்கு வடக்கில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் போதைப்பொருள் விற்போர், வாங்குவோரை பொலிஸாருக்கு தெரிந்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் உள்ளதென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான வினோநோகராதலிங்கம் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற வரவு -செலவுத் திட்ட விவாதத்தின் குழுநிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இன்று இளைஞர்கள் போதைப் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். அவர்கள் வேறு திசைக்கு சென்று கொண்டு இருக்கின்றனர். தற்கொலை செய்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் கூட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## விக்கெட் கம்புகள், தும்புத்தடியால் தாக்கி
# சிறுவனைக் கொன்ற பெண் தகுதி இல்லாதவர்



கல்முனையில் சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில் 14 வயது சிறுவன் விக்கெட் மற்றும் தும்புத்தடியினால் மிக மோசமாக தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் மேற்பார்வையாளரான பெண் எந்த தொழில் ரீதியான பயிற்சிகளும் பெறாதவர்.

தொடர்ச்சி P2

# “கொல்லப்படுவேனோ என அஞ்சினேன்”

வேலணையில் கட்டிய 18 வீடுகளைத் திறந்து வைக்க என்னை நேரில் வந்து அழைத்தார்கள். என்னை மட்டும் அழைக்கின்றார்கள். அங்கு நான் தனியாகச் சென்றால் கொல்லப்படுவேனோ என்று நினைத்தேன் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடக்கு மக்கள் பிரதிநிதிகள் உள்ளார்கள் அவர்களையும் அழையுங்கள் நானும் வருகிறேன் என்றேன். நாங்கள் அவர்களை அழைக்கப் போவதில்லை. அவர்கள் எமக்கு தேவையில்லை நீங்கள் வாருங்கள் என என்னை அழைத்துச் சென்று அங்கு அன்பான வரவேற்பளித்தார்கள். இதுவே உண்மையான தமிழர்களின் நிலைப்பாடாகும் என்றார்.

பாராளுமன்றத்தில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாண பிரதிநிதிகளின் இனவாத நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# “பாலியல் தொடர்பான அறிவு, தெளிவு குறைவு”

நாட்டில் இன்றைய நிலையில் பாலியல் தொடர்பான அறிவு அல்லது தெளிவு சமூக மட்டத்தில் மிகவும் குறைவான மட்டத்தில் உள்ளது. ஆகவே, பல்வேறு காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு பாலியல் கல்வி முறைமையை அமுல்படுத்தாமல் இருந்தால் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எனவே பாலியல் கல்வி கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் குழுநிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாலியல் கல்வி மற்றும் உறவு நிலைகளின் முக்கியத்துவம் தொடர்பில் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இன்றைய நிலையில் பாலியல் தொடர்பான அறிவு அல்லது தெளிவு சமூக மட்டத்தில் மிகவும் குறைவான மட்டத்தில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆகவே பல்வேறு காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு பாலியல் கல்வி முறைமையை அமுல்படுத்தாமல் இருந்தால் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எனவே தற்போதைய நிலையில் பாலியல் கல்வி கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2

## அலெக்ஸ் மர்ம விவகாரம்
# அணிவகுப்பு ஒத்திவைப்பு



■ எம்.றொசாந்த்

பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி-உயிரிழந்த வட்டுக்கோட்டை நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞனின் வழக்கு விசாரணையின் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 08ஆம் திகதிக்கு, திகதியிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளன நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு திங்கட்கிழமை (04) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "முஸ்லிம் நீதியரசரிடம் ரிஷாட் மன்னிப்பு கோரவேண்டும்"

சனிக்கிழமை இடம்பெற்ற நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய ரிஷாத் பதியுதீன் எம்.பி. தனது வழக்கு விவகாரத்தைக் குறிப்பிட்டு 'நீதியரசரை சபிப்பதாக 'குறிப்பிட்டுள்ளார். உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் நவாஸ் முஸ்லிம் மதத்தை சேர்ந்தவர்.அவர் ஒருபோதும் மதத்தை முன்னிலைப்படுத்தி நீதிபதியாகச் சேவையாற்றவில்லை. கௌரவமான முறையில் சேவையாற்றுகிறார்.

ரிஷாத் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முதலாவதாக நீதியரசர் ஜனக் த சில்வா விலகினார்.வில்பத்து காடழிப்பு விவகாரத்தில் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக இவர் தீர்ப்பு வழங்கியதால் இந்த வழக்கிலிருந்து விலகியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.

அதேபோல் இரண்டாவதாக நீதியரசர் சமேவர்தன தனிப்பட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி வழக்கிலிருந்து விலகினார். மூன்றாவதாக நீதியரசர் யசந்த கோடாகொட வழக்கிலிருந்து விலகினார். இவர் விலகியதற்கான காரணத்தை நான் குறிப்பிட விரும்பவில்லை. காரணத்தைக் குறிப்பிட்டால் அது ரிஷாட் பதியுதீனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

இறுதியாக நீதியரசர் ஏ.எச்.நவாஸ் முன்னிலையில் இவரது அடிப்படை உரிமை மீறல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவரும் வழக்கிலிருந்து விலகினார். விலகுவதற்கான காரணத்தை அவர் குறிப்பிட வில்லை. இவர் மீது முன்வைக்கப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டைத் தொடர்ந்து நான் அவ்விடயத்தை ஆராய்ந்து பார்த்தேன்.

ரிஷாத் பதியுதீன் எம்.பி.யின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்தினம் இரவு இந்த வழக்கில் முன்னிலையாகிய கனிஷ்ட சட்டத்தரணி ஒருவர் நீதிபதிக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு 'உங்கள் முன்னிலையில் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கம் சிரேஷ்ட சட்டத்தரணிக்கு உண்டு' என குறிப்பிட்டுள்ளார். அதன்பின்னர் மறுநாள் காலையில் சிரேஷ்ட சட்டத்தரணி தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு 'இந்த வழக்கில் முன்னிலையாக வேண்டாம்' என்று நீதியரசர் நவாஸிடம் குறிப்பிட்டுள்ளார். இதனை நீதியரசர் நவாஸ் பிரதம நீதியரசரிடம் குறிப்பிட்டுள்ளார்.இதன் பின்னரே அவர் வழக்கு விசாரணையிலிருந்து விலகினார்.

## "பிரிக்கும் நோக்கம் பிரபாகரனிடம் இல்லை"

நீதியமைச்சரால் எவ்வாறு கைது செய்ய முடியும். வெறுக்கத்தக்க கருத்தை குறிப்பிட்டிருந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள், பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்ளும் என்று நான் கூறினேன்

மாவீரர் நிகழ்வுகளுக்கு வழக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிபதிகள் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதையிட்டு நீதியமைச்சர் வெட்கப்பட வேண்டும் என்றார். நீதிபதிகள் சுயாதீனமாக செயற்படுவதையிட்டு நீதியமைச்சர் ஏன் வெட்கப்பட வேண்டும்.நான் பெருமைப்பட வேண்டும்.

நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதையிட்டு நீதியமைச்சர் வெட்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். சுமந்திரன் முன்வைத்த மூன்று விடயங்களை சாதாரண பிரஜை ஒருவர் குறிப்பிட்டிருந்தால் அதற்கு பதிலளிக்கலாம், ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும் என்று நான் கூறினேன்.

சுமந்திரனை கொலை செய்வதற்குப் புலம் பெயர் அமைப்பினர் 20 இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்தார்கள். சுமந்திரன் உயிரின் பெறுமதி 20 இலட்சமா என்பது ஆச்சரியத்துக்குரியது. இந்த ஒப்பந்தத்துக்கு அமைய சுமந்திரனை கொலை செய்ய முற்பட்ட 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த ஐவருக்கு எதிராகப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தன்னை கொலை செய்ய முற்பட்டவர்களைப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று சுமந்திரன் கூறுகின்றார்..ஆனால் ஏனையவர்களை கொன்றவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் செய்து செய்ய கூடாது என்கிறார். பிரபாகரன் உயிருடன் இருந்த காலத்தில் சுமந்திரன்,பொன்னம்பலம் ஆகியோர் வடக்குக்கு செல்லவில்லை.பிரபாகரன் இன்றும் இருந்திருந்தால் இவர்கள் வடக்குக்கு செல்லமாட்டார்கள்.ஆகவே பாராளுமன்றத்தில் இனவாதத்தை தூண்டிவிடும் கருத்துகளுக்கு இடமளிக்க வேண்டாம். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பாட்டனார் குமார் பொன்னம்பலம் முற்போக்கானவர் சிறந்தவர், ஆனால், கஜேந்திரகுமாரின் தந்தை ஜி.ஜி.பொன்னம்பலம் கடும் இனவாதி. இவர் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் கம்பளையில் கூட்டத்தை நடத்தி சிங்கள மக்களை அவமதிக்கும் வகையில் வெறுக்கத்தக்க வகையில் கருத்துரைத்தார். முழு சிங்கள சமூகமும் அவருக்குஎதிரானது.

.அமைச்சு பதவியை பெற்றுக்கொண்ட ஜி.ஜி. பொன்னம்பலம் இந்திய வம்சாவளி அந்தஸ்த்துடைய 6 இலட்சத்து 90 ஆயிரம் தமிழர்களின் குடியுரிமையை இரத்து செய்யும் வகையில் கொண்டு வரப்பட்ட 'இந்து - லங்கா குடியுரிமை' சட்டமூலத்துக்கு ஆதரவாக கையுயர்த்தினார். இந்த நாட்டில் தமிழர்களின் வாக்குரிமையை பறிக்கும் சட்டமூலத்துக்கு ஜி.ஜி. பொன்னம்பலம் கையுயர்த்தி ஆதரவு வழங்கினார். அமைச்சு பதவி உள்ள போது இது சரி, பதவி இல்லாத போது இனவாதம் என்றார்.

## சிறுவர்களுக்கு புலி சீருடை அணிந்தமை வெறுக்கத்தக்கது

ஆனால் கிரிக்கெட்டை விடவும் நாட்டில் பல முக்கிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கல்முனை பகுதியில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் 14 வயது சிறுவன் அந்த நிலையத்தின் கட்டுப்பாட்டாளரினால் மிக கொடுமையான நிலையில் தாக்கப்பட்டதை தொடர்ந்து சிறுவன் உயிரிழந்துள்ளார்.இந்த செய்தியை அறிந்து மனவேதனையடைந்தேன். கடந்த மாதம் மாத்திரம் 16 வயதுக்கு குறைவான 131 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோக கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 10 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இவ்விரு செய்திகளும் மிகவும் கொடுமையானவை.

கடந்த வாரம் வடக்கில் மாவீரர் தினம் அனுஸ்டிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடைக்கு ஒத்த சீருடைகளை சிறுவர்களுக்கு அணிவித்ததுடன் அவர்களின் கழுத்தில் சைனட் குப்பிகளை அணிவிப்பதையும் காண முடிந்தது.இது முற்றிலும் வெறுக்கத்தக்க செயற்பாடு. யுத்தக் காலத்தில் பல சிறுவர்கள் போராளிகளாக்கப்பட்டுள்ளார்கள். அந்த நினைவுகளை மீட்கும் வகையில் செயற்படுவது-முறையற்றது என்றார்.

## 50 இலட்சம் பேருக்கு சிவப்பு 'ஷொக்'

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியே இவ்வாறு வலியுறுத்தினார். இலங்கை மின்சார சபை நீர் மின்சார உற்பத்தி மூலம் கோடிக்கணக்கில் லாபம் ஈட்டிவரும் நிலையில் மிகவும் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து வரும் 5 இலட்சம் பாவனையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது 50இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு இவ்வாறு சிவப்பு அறிவித்தல் விடுத்திருப்பது நியாயமா? முருத்தொட்டுவே ஆனந்த தேரரின் அபயராம விகாரையின் மின் இணைப்பைக்கூட அநீதியான முறையில் துண்டிப்பதற்கு முற்பட்டுள்ளனர்.

மக்கள் எதிர்கொண்டு வரும் பொருளாதார நெருக்கடி நிலையை ஏன் அரசாங்கம் இன்னும் உணரவில்லை? மின்சாரசபை பாரியளவில் இலாபம் ஈட்டி வரும்போது மின் கட்டணத்தை ஏன் அதிகரிக்க வேண்டும் என நாங்கள் அன்று மின்சாரத்துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பி இருந்தோம். ஆனால் அதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றார்.

## வடக்கு தமிழ் இளைஞர்கள் போதையில் அழிய அனுமதி

இளைஞர்களுக்குரிய வாய்ப்புக்கள் ,வசதிகள் மறுக்கப்பட்டதாலேயே ஆயுதப்போராட்டம் உருவானது இளைஞர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் அங்கு இல்லை. போதைப்பொருள் புழக்கத்திற்கு அங்கு பொலிஸார் உடந்தையாக உள்ளனர்.

போதைப்பொருள் விற்போர், வாங்குவோரை பொலிஸாருக்கு தெரியும். பாவனையாளரை பொலிஸாருக்கு தெரியும் .ஆனால் யுத்தத்தில் எவ்வாறு இளைஞர்கள் கொல்லப்பட்டார்களோ அதேபோன்று இளைஞர்கள் போதைப்பொருள் பாவனை மூலமும் அழிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றார்.

## சிறுவனைக் கொன்ற பெண் தகுதி இல்லாதவர்

அந்த பதவிக்கான எந்த தகுதியும் அவருக்கு கிடையாது என்று மகளிர்,சிறுவர் விவகார,சமூக வலுப்படுத்துகை இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற வரவு- செலவுத்திட்ட குழு நிலை மீதான விவாதத்தில் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

சிறுவன் மீது தாக்குதலை மேற்கொண்டு கைது செய்யப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் மேற்பார்வையாளரான பெண் எந்த தொழில் ரீதியான பயிற்சிகளும் பெறாதவர் . அந்த பதவிக்கான எந்த தகுதியும் அவருக்கு கிடையாது என்றார். கல்முனை சம்பவம் தொடர்பில் எனது முழுமையான அவதானத்தை செலுத்தியு ள்ளேன் மேற்படி சிறுவன் பெற்றோர்களினால் கைவிடப்பட்டவர் மேற்படி சம்பவம் தொடர்பில் தற்போது உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,குறித்த பெண் முறைப்படி அந்த பதவிக்கு வந்தவரா அல்லது பின்புற கதவின் மூலம் வந்துள்ளாரா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.அவர் பரீட்சைக்கு தோற்றியிருந்தாலும் எந்த தொழில் தகைமையையும் கொண்டிருக்கவில்லை எனடறபலடஇ அந்த வகையில் நன்னடத்தை அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கும் வேலைத் திட்டம் அமைச்சு மட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார்.

## "கொல்லப்படுவேனோ என அஞ்சினேன்"

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்த உரையாற்றும் போதே மேற்கண்டவறாறு தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் நான் ஆற்றிய சேவைகளில் பத்தில் ஒன்றைக்கூட தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஆற்றவில்லை. கடந்த ஒன்றரை வருட காலத்துக்குள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 6 நடமாடும் சேவைகளை முன்னெடுத்தேன். வடக்கு மாகாணத்தில் அடிப்படை ஆவணங்கள் ஏதும் இல்லாத 12 ஆயிரம் பேருக்கும்,கிழக்கு மாகாணத்தில் உள்ள 3000 பேருக்கும் உரிய ஆவணங்களை பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன் என்றார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தமிழ் பிரதிநிதிகள் தீர்வு காண்பதில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு எம்மிடம் கேட்பதுமில்லை. பாராளுமன்றத்தில் உள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதிநிதிகளின் நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் இல்லை.தமிழ் மக்களை நாங்களும் பிரதிநிதித்து வப்படுத்துகிறோம்.அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு இனவாதத்துடன் செயற்படுகிறார்கள் என்றார்.

மாவீரர் தினத்தில் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். மாவீரர் தினத்தன்று பிரபாகரனினதும்,விடுதலை புலிகள் அமைப்பின் சின்னத்தையும் பதிவு செய்த மேலாடை (டீசர்ட்) அணிந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் அது அவ்வாறில்லை என்று குறிப்பிடுகிறார்கள் என்றார்.

## "பாலியல் தொடர்பான அறிவு, தெளிவு குறைவு"

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள்,தரப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் சபையில் குறிப்பிடப்பட்டது.ஆனால் இந்த பிரச்சினையில் உள்ள உண்மை அம்பலப்படுத்த ப்படவில்லை. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.களனி பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுக்கமைய, 62 சதவீதமான பெண்கள் தமது நெருக்கமானவர்களினால் தாக்கப்படுகிறார்கள்,50 சதவீதமான பெண்கள் தமது கணவன்மார்களினால் கொலை செய்யப்படுகிறார்கள்.,82 சதவீதமான பெண்கள் தமது வீட்டில் இடம்பெறும் முரண்பாடுகளினால் கொலை செய்யப்படுகிறார்கள். ஆகவே இவ்வாறான நிலைமை குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## "மலையகப் பெண்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது"

பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள சிறுவர் முன்பள்ளி பாடசாலைகளை தோட்ட நிர்வாகங்களே மேற்கொண்டு வருகின்றன. ஆனால், இந்த தோட்ட நிர்வாகங்கள் மனிதர்களாக இல்லாமல் மிருகங்களாக செயற்பட்டு வருகின்றன. அதேவேளை, இன்றும்கூட மலையக பெண்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட எம்.பி.யான வேலுகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் விவகார, சமூக வலுப்படுத்துகை அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இந்த நாட்டில் மலையக பெண்கள், சிறுவர்கள் சமூகத்தில் ஓரம் கட்டப்பட்ட பிரிவினர்களாகவே உள்ளனர்.. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு மிக முக்கிய பங்களிப்பை வழங்கிவருவது எமது பெருந்தோட்ட பெண்களே. ஆனால், இலங்கையர்களாக அவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுத்திருக்கின்றோமா என்றால் எதுவுமே இல்லை.

இன்றும்கூட பெண்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. 8 மணித்தயாலத்துக்கு அதிகம் தொழில் செய்து. வெறும் 1000 ரூபாவே பெறும் நிலை இருக்கிறது. ஆனால் தொழில் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய மேலதிக நேர கொடுப்பனவுகளோ அல்லது விடுமுறை சலுகைகளோ எதுவும் வழங்கப்படுவதில்லை.

சிறுவர் முன்பள்ளி தொடர்பாக பல்வேறு நியமங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற போதும் பெருந்தோட்ட பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் அங்கே சிறுவர் முன்பள்ளி பாடசாலைகளைத் தோட்ட நிர்வாகமே மேற்கொண்டு வருகிறது. ஆனால் இந்த தோட்ட நிர்வாகங்கள் மனிதர்களாக இல்லாமல் மிருகங்களாகச் செயற்பட்டு வருகின்றன. இந்த தோட்டங்களில் இருக்கக்கூடிய குழந்தை காப்பகங்கள் மற்றும் சிறுவர் முன்பள்ளிகள் லயம் அறைகளில் அல்லது ஒதுக்கப்பட்ட ஒரு இடத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக அந்த கட்டிடங்கள் பல வருடங்களாக நிறப்பூச்சு பூசப்படாத, மலசலக்கூட வசதி இல்லாத, நீர், மின்சார வசதிகள் இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றன. அங்கு பயிற்சி அளிக்கப்படாதவர்களாகவே அங்கு கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் சிறுவர் மகளிர் தொடர்பான அமைச்சோ அதிகாரசபையோ இது தொடர்பாக திரும்பியும் பார்ப்பதில்லை.

அத்துடன், தொழில் சட்டங்கள் தோட்டபுறங்களில் அதிகமாக மீறப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களின் உரிமைகள் பாரியளவில் மீறப்பட்டு வருகின்றன. கண்டி பன்வில கலாபொக்க தோட்டத்தில் அண்மையில் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் மீது மரம் முறிந்து விழுந்ததில் அவர் மரணித்துள்ளார். அதேபோன்று இன்னும் சிலர் தொழில் செய்ய முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## அணிவகுப்பு ஒத்திவைப்பு

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான- வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய நான்கு பொலிஸ் உத்தியோ கஸ்தர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.


கடந்த வழக்கு தவணையில், அடையாள அணிவகுப்பு திகதியிடப்பட்டது. எனினும், வழக்கின் பிரதான சாட்சியமான, உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மன்றில் ச மூகமளிக்காத நிலையில், அடையாள- அணிவகுப்புக்கு 08ஆம் திகதியை-திகதியிட்டது.

அதன் போது சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் , அடையாள அணிவகுப்பு சந்தேக நபர்களை முற்படுத்தும் போது, சந்தேகநபர்களு டன் முற்ப டுத்தப்படும் ஏனைய நபர்கள் சந்தேகநபர்களின் தோற்றத்தை ஒத்தவர்களாவும் , பொலிஸ் உத்தியோகஸ்த ர்களாகவும் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். அதனை மன்று- ஏற்றுக்கொண்டது.

அதனை தொடர்ந்து 08ஆம் திகதிக்கு அடையாள அணிவகுப்புக்கு-திகதியிட்ட மன்று , செவ்வாய்க்கிழமை மதியம் 2.30 மணிக்கு மரண-விசாரணைக்காக திகதியிட்டுள்ளது.

# சுற்றுலா விடுதியில் புதையல் தோண்டிய 9 பேர் கைது

■ ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - கற்பிட்டி தேதாவாடிய பிரதான வீதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்ததாக கூறப்படும் ஒன்பது பேர், பொலிஸாரால் திங்கட்கிழமை (04) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றுலா விடுதியின் உரிமையாளர் உட்பட அங்கு பணிபுரியும் ஊழியர்கள் உள்ளிட்ட 9 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மண்வெட்டி, கோடரி உள்ளிட்ட பொருட்களும், பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இதன்போது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தும்மலசூரிய மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் இச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# மக்களின் பார்வைக்கு மாநகர பட்ஜெட்

கல்முனை மாநகர சபையின் 2024ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத் திட்ட அறிக்கை பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாக மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கல்முனை மாநகர சபையின் பிரதான அலுவலக முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த வரவு- செலவுத் திட்ட அறிக்கையை அலுவலக நேரத்தில் பொது மக்கள் பார்வையிட முடியும். மேலும், இதில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் தொடர்பிலான தமது கருத்துகளை எதிர்வரும் 11ஆம் திகதி வரை எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# மனித உரிமைகள் தினம் அனுஷ்டிப்பு

■ அ. அச்சுதன்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு AHRC நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை, வெருகல் பிரதேச சிவில் அமைப்புகளினால் வட்டவன் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் மனித உரிமைகள் தின வாரம் திங்கட்கிழமை (04) அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது வெருகல் பகுதியில் மீறப்பட்டு வருகின்ற மனித உரிமைகள் தொடர்பாக மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர். குறிப்பாக தமது பிரதேசத்தின் மணல் வளம் சுரண்டப்படுகின்றமை, காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை, பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை பெறுவதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுகின்றமை உட்பட பல மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை தெரிவித்ததோடு அது தொடர்பான மகஜர் ஒன்றினை மனித உரிமைகள் தினத்தன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதிகள், நடத்துனர்கள் நடு வீதியில் கைகலப்பு

## மூவருக்கு காயம்: மூவர் கைது

■ டி.சந்ரு

நுவரெலியாவில் அரச மற்றும் தனியார் பேருந்து சாரதிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு பின்னர் கைகலப்பாக மாறி இருவருக்கும் இடையில் பாரிய மோதல் ஏற்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (03) பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், தாக்குதல் ஏற்படுத்திய மூவரை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மூவர் மாத்திரமே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தாக்குதல் ஏற்படுத்திய ஏனைய நபர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நுவரெலியாவில் திடீர் பணிப்பகிஷ்கரிப்பில் திங்கட்கிழமை (04) ஈடுபட்டனர்.

இந்த பகிஷ்கரிப்பு காரணமாக பொதுமக்கள், அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை இராகலை மற்றும் நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கடன் மறுசீரமைப்பில்

# சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு



இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கொடுப்பணவு தொடர்பான கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.கடன் தவணை கிடைக்கும் என நம்புகிறோம்.ஆனால் கடன் மறுசீரமைப்பில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மற்றும் உற்பத்திப் பொருளாதாரத்தின் ஊடாக உலகச் சந்தையைக் கடக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற அடிப்படைக் கருத்தோட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி செயற்பட்டு வருகிறது. நாட்டிற்கு கட்டமைப்பு ரீதியான பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை.கடன் மறுசீரமைப்பு இல்லாமல் நாடு முன்னேற முடியாது. நாடு குறித்து சிந்திப்பதாக இருந்தால் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா கடனை மறுசீரமைப்புக்கு ஒப்புக்கொண்டதாக அரசாங்கம் கூறுகிறது. சீனாவிற்கு வழங்கப்பட வேண்டிய 5.8 மில்லியன் டொலர்களை மறுசீரமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இணக்கம் தெரிவித்துள்ளது.ஏனைய கடனாளிகளுடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை தேவை என்றார்.

நாங்கள் எந்த அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும்,இந்நாடு எங்களுக்கு முக்கியம். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் ராஜபக்ச குடும்பமும் அவர்களுடன் உள்ள குழுவினரும் நாட்டை வங்குரோத்தாக்கைம் முடிவுகளை எடுத்துள்ளனர்.

1994 மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவால் ஆரம்பிக்கப்பட்ட ஏற்றுமதி கொள்கையை கவனத்தில் கொள்ளாமல் இறக்குமதி மாற்றுகளை கொண்டு வந்ததன் மூலம், நாட்டின் ஏற்றுமதி வருமானம் குறைந்தது. இலங்கை வீழ்ந்த பள்ளத்தில் இருந்து மீள அரசாங்கம் சில உடன்பாடுகளுக்கு வர வேண்டும்.இந்த உடன்பாடுகள் அனைத்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புடையவை என்றார்.



# விபத்தில் ஒருவர் படுகாயம்

■ தீஷான் அஹமட்

திருகோணமலையில் திங்கட்கிழமை (04) மோட்டார் சைக்கிளுடன் காரொன்று நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64ஆம் கட்டை மலையடி பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# வைத்தியசாலை திறப்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நாவலடி ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் திங்கடக்கிழமை (04) திறந்து வைக்கப்பட்டது.

நாவலடி ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையத்தின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி தமிழ்வாணனின் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா வைபவங்களில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் செயலாளர் எஸ்.முரளிதரன் உட்பட பலரும் பங்கேற்றனர்.

## இலங்கை– இந்தியாவுக்கும் இடையே

# எண்ணெய்க் குழாய் இணைப்பு

## ஆளுநர் செந்தில் தலைமையில் கலந்துரையாடல்

இலங்கையில் எரிபொருள் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இந்தியாவில் உள்ள நாகப்பட்டினத்திற்கும், திருகோணமலைக்கும் இடையே எண்ணெய்க் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பாகப் கலந்துரையாடலொன்றை இடம்பெற்றுள்ளது.



இக்கலந்துரையாடல் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஆகியோருடன் இந்தியன் பெற்றோலிய கூட்டுறவின் செயற்பாட்டுத் தலைவர் மற்றும் இந்திய பெற்றோலிய அமைச்சின் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது உள்நாட்டு ரயில்வே பாதைக்கு அருகாமையில் குழாய் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டதுடன், இச்செயற்திட்டத்தின் ஊடாக பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எரிபொருள் விலையைக் குறைக்கக் கூடிய சாத்திய கூறுகள் குறித்தும் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

**தொழிலாளர்கள் தேவை**

தையல் கலைஞர் (ஆண் , பெண்), உதவியாளர் (பெண்), ஷோ ரூம் பராமரிப்பாளர் (பெண்) தேவை. இலக்கம் 1 & 3 (1D) , சின்சபா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06, தொடர்புகளுக்கு 0777340758 அறை 0765637235

# வீடியோ பேச்சுப் போட்டி

சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமும், இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு என்பன சர்வதேச கிருஷ்ணபக்திக்கழகத்துடன் (ISKCON Sri Lanka) இணைந்து சர்வதேச கீதா மஹோத்சவ வீடியோ பேச்சுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளன.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே 50 ஆயிரம், 30 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டி விபரம் வருமாறு:

17 - 21 வயதினர் சமகாலத்தில் பகவத்கீதையின் பொருத்தம் பற்றியும்

13 - 16 வயதினர் பகவத்கீதையின் புரிதல் பற்றியும் இரண்டு நிமிடங்கள் பேசவேண்டும்.

8 - 12 வயதினர் பகவத்கீதை சுலோகங்களை இரண்டு நிமிடங்கள் ஓதவேண்டும்.

போட்டி முடிவு திகதி டிசெம்பர் 10ஆம் திகதியாகும். பரிசுகள், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் டிசெம்பர் 22ஆம் திகதி நடைபெறும் கீதா ஜயந்தி விழாவில் வைத்து வழங்கப்படும்.

போட்டிக்கான வீடியோ பதிவுகளை competitionsvcccmb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.



## நன்னடத்தை பாடசாலை சிறுவன் மர்ம மரணம்:

# பெண்ணுக்கு விளக்கமறியல் நீடிப்பு

■ பாறுக் ஷிஹான்

உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் திங்கட்கிழமை வரை (4) விளக்கமறியலில் வைக்கப்பட்டு, கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் திங்கட்கிழமை (04) ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மரணமடைந்த சிறுவனின் தந்தை ஆஜராகி இருந்ததுடன் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணிகளின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மணி ஒன்றை களவு செய்ததாக குற்றச்சாட்டின் பேரில் கொக்குவில் பொலிஸாரால் கடந்த மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட பின்னர் நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் குறித்த காப்பகத்தில் பாதுகாப்பிற்காக தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மட்டக்களப்பு கொக்குவில் பகுதியை சேர்ந்த ஆனந்ததீபன் தர்சான்ந் எனும் 14 வயதான சிறுவனே மரணமடைந்துள்ளார்.

# மக்களுக்கு ‘சிவப்பு எச்சரிக்கை’: அரசியல்வாதிகளுக்கு ‘பச்சை கொடி’

எமது நாட்டைப் பொறுத்தவரையில் பல வர்ணங்களைக் கொண்ட கட்சிகள் இருக்கின்றன. இதில், நீலம், பச்சை, சிவப்பு, செம்மஞ்சள், மெரூன் பிரதான கட்சிகளின் நிறங்களாகும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் ஆழமான கருத்துக்களை முன்வைக்கும் போது, நிற பேதங்களை மறந்து அனைவரும் ஓரணியில் ஒன்று திரளவேண்டும் என பலரும் அழைப்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

அவ்வாறானவர்களில் பலர், கண்ணாடி கூண்டுக்குள் இருந்துகொண்டே வெளியில் கல்லெறிகின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது.

‘சிறப்புரிமை’க்குள் இருந்துகொண்டு பல்வேறான தில்லு முல்லு நடவடிக்கைகளிலும் ஏமாற்றும் செயற்பாடுகளிலும் மக்கள் பிரதிநிதிகள் பலரும் ஏமாற்றுகின்றனர்.

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர், அக்கட்டணத்தைச் செலுத்த முடியாமையால், சாதாரண குடும்பங்களுக்கான மின்னிணைப்புகள் துண்டிக்கப்பட்டன. மின்சாரக் கட்டணத்தை ஓரிரு நாட்களுக்குள் செலுத்திவிடுவோமென கெஞ்சி பார்க்கும் ஒரு சிலர், கோபம் தலைக்குமேல் ஏறிவிட, மின்சார இணைப்பைத் துண்டிக்க வந்திருக்கும் ஊழியர்களையும் தாக்கிவிடுவர். மின் விநியோகம் துண்டிக்கப்பட்டாலும், சேவைக்கட்டணமெனக் கூறி, அடுத்த மாதத்துக்கான மின் பட்டியலும் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இது, “மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டியது போல” மின்சாரத்தை நுகரும் பலருக்கும் இருக்கின்றது. மின் கட்டணத்தில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) தாக்கத்தைச் செலுத்தாது என அறிவிக்கப்பட்டிருந்தாலும், ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பு பெரும் தாக்கத்தைச் செலுத்தும்.

எனினும், 2022ஆம் ஆண்டின் இறுதியில் பாராளுமன்ற பிரதிநிதிகளின் வீடுகளுக்கு வழங்கப்பட்ட 74 மின் இணைப்புகளுக்காக 16 மில்லியன் ரூபாய் மீளப் பெறப்படவில்லையென வருடாந்த கணக்காய்வு அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், 29 இணைப்புகள் தொடர்பாக 5 மில்லியன் ரூபாய், ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. முப்பது இணைப்புகள் தொடர்பான 3 மில்லியன் ரூபாய் ஒரு வருடத்திற்கும் மேலாக மீட்கப்படாமல் நிலுவையில் உள்ளதென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு ஏற்றவகையில், கட்டணம் அடங்கிய பட்டியல் வருமாயின், எந்தவொரு சாதாரண நபரும், இலங்கை மின்சார சபையை ஏமாற்றமாட்டார். எனினும், மக்கள் பிரதிநிதிகளில் பலர், அரச நிறுவனங்களை ஏமாற்றுவதிலேயே குறியாக இருந்து செயற்படுகின்றனர். ஏமாற்றுவதை தங்களுடைய சிறப்புரிமைக்குள் வைத்துக்கொள்வதுதான் வேடிக்கையான விடயமாகும்.

மின் கட்டணத்தைச் செலுத்த முடியாத 5 இலட்சம் பேரின் மின் இணைப்புக்கள் இதுவரை துண்டிக்கப்பட்டுள்ளதுடன், 50 இலட்சம் பேருக்கு மின் இணைப்பைத் துண்டிப்பதற்கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதென பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (04) உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

மொத்தத்தில் பார்க்குமிடத்து மக்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்படுவதுடன் ஏமாற்றும் ஒருசில அரசியல்வாதிகளுக்குப் பச்சைக் கொடி அசைக்கப்படுகின்றது என்பதே நிதர்சனம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# எழுதப்படாத தீர்ப்புக்கள்

மொஹமட் பாதுஷா

இலங்கையில் நிலைமாறுகால நீதி, நாட்டில் நிலவும் நாட்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு மற்றும் நீதமான நீதிப் பொறிமுறை பற்றியெல்லாம் நாம் நெடுங்காலமாகப் பேசி வருகின்றோம். இன்னும் சொல்லப் போனால், பேசிப்பேசியே இலங்கையரின் காலம் கழிந்து கொண்டிருக்கின்றது தவிர, கிடைத்த பலன் பெரிதாக ஒன்றுமில்லை.

இவ்வாறான ஒரு சூழலில் அவ்வப்போது வெளியாகும் சில தீர்ப்புக்கள் மக்களை ஆசுவாசப்படுத்துகின்றன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷக்கள்தான் மூலகாரணம் என்ற அடிப்படையில் அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பையும் இவ்வகைக்குள் உள்ளடக்கலாம். ஆனால், மக்கள் இது குறித்து ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், ராஜபக்ஷக்கள் மீது இப்படியொரு தீர்ப்பை மக்கள் நீதிமன்றம் எப்போதோ எழுதிவிட்டது. அதனை சட்டப்படி உயர்நீதிமன்றம் இப்போது எழுதியிருக்கின்றது. ஆனால், இதனை ராஜபக்ஷ தரப்பு மறுத்திருக்கின்றது. ‘அவர்களிடமிருந்து நஷ்டஈடு கோர வேண்டும்’ என்ற குரல்கள் மறுதரப்பில் இருந்து எழுந்துள்ளன.

இந்தக் கோரிக்கையில் முழுமையாகவே நியாயமுள்ளது. இப்படியொரு நிலைமை நாட்டுக்கு ஏற்படும் என்பதை சாதாரண பொதுமக்களே அப்போது எச்சரிக்கை செய்திருந்தனர். அதிகாரக் கதிரையில் அகலக் கால்போட்டு, இனவாதத்தின் உச்சாணிக் கொம்பில் நின்றாடிய கோட்டபாயவும் ராஜபக்ஷ ஆதரவு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

ஆகவே, அவர்கள் நீதிமன்ற தீர்ப்புக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். ஆனால், இலங்கையில் மக்கள் சார்பு அரசியலையும் ஆளுகையையும் ஏற்படுத்த வேண்டுமாயின், அவர்களை மட்டும் தண்டித்தால் போதுமா என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

சுதந்திரத்திற்குப் பிறகான இலங்கையில் இதுவரை ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் குழப்பங்களுக்கு எல்லா அரசாங்கங்களும் பெருந்தேசிய அரசியல் சக்திகளும் ஏதோ ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கின்றன. இது பொதுவாகவே மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

ஜே.ஆருக்கு முன்பிருந்தவர்கள் தொடக்கம், மஹிந்த தொட்டு கோட்டாபய வரை வரையான அனைத்து ஆட்சியாளர்களும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களே. இதில் ராஜபக்ஷக்களுக்கு பெரும் பங்குள்ளது. ஆனால், ராஜபக்ஷர்களை தவிர மற்றவர்களுக்கு எதிரான தீர்ப்பைக் காலம் இன்னும் எழுதவில்லை.

இதேபோன்ற அரசியல் குற்றங்களைச் சிறுபான்மை அரசியல் தலைவர்கள் மற்றும் எம்.பிக்களும் நிகழ்த்தியிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் விடயத்தில் ஒப்பீட்டளவில் தமிழ் அரசியல்வாதிகள் அக்கறையாகச் செயற்படுகின்றார்கள் என்பது வெளிப்படையானது.

ஆயினும், இனப் பிரச்சினை தீர்வு, பேச்சுக்கள், அதிகாரப் பகிர்வு என்று பேசிப் பேசியே பல வருடங்கள் கடத்தப்பட்டிருக்கின்றன. அங்குமிங்குமாக காணி, உரிமைசார் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும் கணிசமான தமிழ் மக்களுக்கு அன்றாட வாழ்வியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.

இனப் பிரச்சினை தீர்வைக் காரணம் காட்டி மக்களின் ஏனைய பிரச்சினைகளை இழுத்தடிக்கின்ற போக்கையும் சில தமிழ் அரசியல்வாதிகள் கடைப்பிடிப்பதாகத் தோன்றுகின்றது. இவ்வாறான அரசியல்வாதிகள் மட்டுமன்றி தங்களது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ‘துவாரகா’ போன்ற நாடகங்களை ஓடவிடுகின்ற தரப்புக்களும் மக்கள் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டியவர்களே.

அதுபோலவே, மலையக தமிழ் மக்கள் விடயத்தில் அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் தோட்டக் கம்பனிகளும் பெரும் வரலாற்றுத் தவறுகளை இழைத்து வருகின்றன. இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு முதுகெலும்பாகத் திகழ்கின்ற மக்கள் பிரிவாகத் தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுகின்ற போதிலும், ஏனைய மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற உரிமைகள், அபிவிருத்தி அந்த மக்களுக்குக் கிடைக்கவில்லை. இது மிகப் பெரிய வஞ்சனை என்பதை யாராலும் மறுக்க முடியாது. வெறுமனே ‘200 வருடங்கள் பூர்த்தி’ என்று சொல்லிக் கொள்வதும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் போல, மலையக மக்களையும் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்குள் அப்படியே விட்டுவிடாது இலங்கையர் என்ற அடிப்படையில் அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

இந்த மக்களை இன்னும் அடிமைச் சமூகமாக வைத்திருக்க காரணமான அரசியல்வாதிகள், அரசாங்கங்கள் மட்டுமன்றி முதலாளித்துவ சமூகமும் மக்கள் நீதிமன்றில் நிறுத்தப்படுதல் வேண்டும்.

இது இவ்வாறிருக்க, முஸ்லிம் அரசியலில் இதைவிட பாரதூரமான அரசியல் குற்றவாளிகள் இருக்கின்றார்கள். இவர்களில் பலர் முன்னாள் எம்.பியாக, பழைய அரசியல்வாதியாக ஆகிவிட்டார்கள். இன்னும் சிலர் இப்போதும் பதவியிலிருந்து கொண்டிருக்கின்றனர்.

ஆயினும், அவர்கள் சமூக விடயத்தில் இழைத்த குற்றங்களுக்காக முறைசார் நீதிமன்றிலோ அல்லது மக்கள் நீதிமன்றத்திலோ சரியாகத் தண்டிக்கப்படவில்லை என்றே கூறலாம். அரசியல்வாதியாக, எம்.பியாக பிரதிநிதித்துவ அரசியலுக்கு உள்ளே வருபவர்களை யாரும் வலிந்து தள்ளுவது கிடையாது. சமூகம் அவர்களது காலைப் பிடித்து, தலைவராக, தளபதியாக, எம்.பியாக இருங்கள் என்று மன்றாடுவதும் இல்லை. அவர்கள் விரும்பித்தான் இந்த களத்தில் குதிக்கின்றார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் நிர்ணயிக்கப்பட்ட பணிகள் உள்ளன. அதை அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ செய்தே ஆக வேண்டும். இது அரசியல்வாதிகளுக்கு நூறு சதவீதம் பொருந்தக் கூடிய விதியாகும். இது சமூகக் கடமை, பொறுப்பு என்பதையும் விடத் தாம் நியமிக்கப்பட்ட பதவிக்கு உண்டான பணி என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபுக்கு முன்னரான காலத்தில் முஸ்லிம் அரசியல் என்பது பெரும்பாலும் பெரும்பான்மைக் கட்சிகளையும் தமிழரசுக் கட்சியையும் சார்ந்தியங்குகின்ற போக்கைக் கொண்டிருந்தது. ஆனால், விடுதலைப் புலிகளும் ஏனைய ஆயுதக் குழுக்களும் முஸ்லிம்களை நோக்கி துப்பாக்கிகளைத் திருப்பிய பிறகு நிலைமை மாறியது. அந்த காலத்தின் தேவையுணர்ந்து ஏதோ ஒரு அடிப்படையில் சிறப்பான அரசியலை மர்ஹூம் அஷ்ரப் தொடக்கி வைத்து, முன்னெடுத்தார் எனலாம். அதில் தெளிவான பார்வை, துணிச்சல், மக்கள் சார்புப் போக்கு அதிக இடத்தைப் பிடித்திருந்தது எனலாம்.

ஆனால், அவரது மறைவுக்குப் பின்னரான முஸ்லிம் அரசியலின் நிலையென்ன? இலக்கென்ன? கடந்த 23 வருடங்களில் பல முஸ்லிம் கட்சிகள், மொத்தமாகக் கிட்டத்தட்ட 25 எம்.பிக்கள், முதலமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள் எல்லாம் சேர்ந்து முஸ்லிம்களுக்கான அரசியலில் எத்தகைய சாதனைகள் நிகழ்த்தியிருக்கின்றன?

சமாதான பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு உரிய அந்தஸ்து கிடைக்கவில்லை. வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான காணிப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாதுள்ளன. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினை இன்னும் முற்றாகத் தீர்க்கப்படவில்லை. யாழ். குடாநாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டமை, கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாசல்கள், வயல் நிலங்களில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டமை, கடத்தல், கப்பம் பெறப்பட்டமை என யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்கள், இந்திய அமைதி காக்கும் படையின் மீறல்களுக்கு இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

நீதி கிடைப்பது ஒருபுறமிருக்க, முஸ்லிம் தலைவர்களும், எம்.பிக்களும் தமது கடமையுணர்ந்து முஸ்லிம் மக்களுக்கு இப்படியெல்லாம் பிரச்சினைகள் உள்ளன என்பதையாவது முறையாகவும் காத்திரமாகவும் முன்வைத்து குரல் கொடுக்கவில்லை.

எம்.பி. பதவி, அமைச்சுப் பதவி. ஆளும் தரப்புடனான தேனிலவு மற்றும் பணம் சம்பாதிக்கும் வாய்ப்புக்களில் காட்டிய அக்கறையை முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முன்னாள் மற்றும் இந்நாள் முஸ்லிம் எம்.பிக்களில் 90 சதவீதமானோர் வெளிப்படுத்தவே இல்லை என்பதே கவலை தரும் உண்மையாகும்.

மறுபுறத்தில், சட்டமூலம், பட்ஜெட் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பு போன்ற முக்கிய தருணங்களை சமூக நலனுக்காகப் பயன்படுத்திய அரசியல்வாதிகளை விட தமது சொந்த நலனுக்காகக் காய்நகர்த்திய முஸ்லிம் எம்.பிக்கள்தான் அதிகம் என்பதை நாடறியும்.

இதுவெல்லாம் அரசியல், சமூகக் குற்றங்கள் இல்லையா? இதனால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியதில்லையா? இதன் குற்றவாளிகளுக்கு எதிராக மக்கள் நீதிமன்றம் தீர்ப்பெழுத வேண்டியது அவசியமில்லையா?

ஆகவே, இந்த நாட்டில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பெரும் சீரழிவுக்கு ராஜபக்ஷக்களிடம் இருந்து நஷ்டஈடு பெறுகின்ற சமகாலத்தில், நாட்டில் இதற்கு முன்னர் நடந்த தவறுகளுக்காக ஏனைய பெருந்தேசிய ஆட்சியாளர்களும் விசாரணைக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். அதுபோலவே, தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகளை நிறைவேற்றத் தவறிய தமிழ் அரசியல்வாதிகளும், மலையக மக்களை அடக்கியாளும் அரசியல்வாதிகளும் மக்கள் நீதிமன்றின் முன் முன்னிறுத்தப்பட வேண்டும். முஸ்லிம் அரசியலை நாசப்படுத்தி முஸ்லிம் சமூகத்தின் எந்தப் பிரச்சினையையும் தீர்க்காமல் வெறுமனே பதவிகளை மட்டும் காலகாலமாக சுகித்துக் கொண்டிருக்கின்ற தலைவர்கள், முஸ்லிம் எம்.பிக்களும் மக்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும்.

ஆகவே, மேற்சொன்ன தரப்புகளுக்கு எதிராக இன்னும் மக்கள் நீதிமன்றம் தீர்ப்பெழுதவில்லையே தவிர, அதற்காக இவர்கள் எல்லோருமே மக்கள் சார்பு அரசியலில் குற்றவாளிகள் என்று அர்த்தமில்லை.



## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாகச் சம்பவித்து விடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டு விடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும். தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பயன்பாட்டுக்கு வழங்கவும்



பொத்துவில், பிரதேச செயலாளர் பிரிவில் இடை நிறுத்தப்பட்டுள்ள சர்வோதயபுரம் பிரதான வீதியின் புனரமைப்பு பணிகளை மீளவும் ஆரம்பித்து வீதியை பயன்பாட்டுக்கு வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் தினமும் பயணித்து வருகின்றனர். பொத்துவில் பிரதேசத்தில் மிகவும் முக்கியமான வீதியாக காணப்படும் இவ்வீதி

சேதமடைந்துள்ளதால் மழைக் காலங்களில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு சுமார் 12 கிலோமீற்றர் நீளமான வீதியைப் புனரமைக்கும் வேலைகள் கடந்த 2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த வீதியானது ஆங்காங்கே சிறு, சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சரியான திட்டமிடல் இன்மையால் குறைந்தளவிலான புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்று, மிகுதி தூரம் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன. இதனால், அவ்வீதி ஆங்காங்கே குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியினூடாக செல்லும் பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளாவதாகவும், செல்லும் வாகனங்கள் சேதமடைவதாகவும், அவசர தேவைகளுக்கு செல்லவேண்டி ஏற்படின் உரிய நேரத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, கைவிடப்பட்டுள்ள இவ்வீதியின் புனரமைப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகளும், பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எம்.எஸ்.எம். ஹனீபா

# பாடசாலைகளின் வளர்ச்சியே இலக்காகும்











பிரித்தானியாவில் நெடுங்கேணிக் கல்விச் சங்கத்தின் ஆண்டு விழா

'கடந்த ஆறு ஆண்டுகளாக நெடுங்கேணிப் பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கம் அப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டிற்குரியன. பிரித்தானியாவில் வாழும் நெடுங்கேணிப் பிரதேச மக்களும் ஏனைய நலன் விரும்பிகளும் ஒருங்கிணைந்து, தாயகத்தில் தம் பிரதேச நலனை முன்னெடுப்பதில் காட்டிவரும் அக்கறையைப் பாராட்டுகிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளாக பிரித்தானியாவில் மருத்துவராகப் பணியாற்றி வரும் அனுபவத்திலிருந்து, நெடுங்கேணிப் பிரதேசத்தின் சுகாதார, மருத்துவ வசதிகளிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்' என்று லண்டன் உயற்குன்று முருகன் ஆலய மண்டபத்தில் ஒக்டோபர் சனிக்கிழமை (28) நடைபெற்ற நெடுங்கேணிக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி ஜெய்சன் விவேகானந்தராஜா தனது சிறப்புரையில் இவ்வாறு தெரிவித்தார்.

'கடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தால் பேரிழப்புகளைச் சந்தித்த நெடுங்கேணிப் பிரதேசம் இன்று சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பெரும் சவால்களைச் சந்தித்து வருகிறது. கல்வி, தொழில், குடும்பநலன் போன்ற விடயங்களில் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை மேற்கொள்ள பிரித்தானியாவாழ் நெடுங்கேணிப் பிரதேச நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து உதவ முன்வரவேண்டும்' என்று நெடுங்கேணிப் பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர் செ.கருணாகரன் தனதுரையில் வேண்டுகோள் விடுத்தார்.

'நெடுங்கேணிப் பிரதேசத்தின் ஆரம்பநிலைக் கல்வியை முன்னேற்றும் செயற்பாடுகளிலும் ஆங்கில மொழி அறிவினை மேம்படுத்தும் திட்டத்திலும் சில அடிப்படைச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பினை வழங்குவோம்' என்று வடமாகாண முன் பள்ளிச் சம்மேளனத்தின் இயக்குநர் சசிதானந்தன் தெரிவித்தார்.

நெடுங்கேணி மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கக் காப்பாளர் தமிழரசி அன்பழகன் 'நெடுங்கேணி இளங்கதிர் 2023' ஆண்டு மலரை அறிமுகப்படுத்தி உரையாற்றியபோது, 'கடந்த ஆண்டு நெடுங்கேணி மகாவித்தியாலத்திலிருந்து பதினொரு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லுமளவிற்கு எங்கள் பாடசாலை வளர்ந்து வருவதில் நாம் பெருமை அடைகிறோம். நெடுங்கேணியுடன் ஊஞ்சார்கட்டி, மருதோடை, பழம்பாசி, ஆயிலடி ஆகிய கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். பல்கலைக்கழகத்தில் நமது மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கவும் எமது சங்கம் உதவி வருகிறது' என்று குறிப்பிட்டார்.

நெடுங்கேணிப் பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சபை ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி கலாநிதி ச.பரமலிங்கம் ஆண்டு மலரை வெளியிட்டுவைத்துப் பேசுகையில், 'வவுனியா வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் எழுபது ஆயிரம் ஏக்கர் நிலம் கரும்புப் பயிர்ச் செய்கைக்காக அந்நிய கம்பெனிகளுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கான செய்திகள் எமக்குப் பெருங் கவலை அளித்தன. கடந்த 75 ஆண்டுகளாக வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்த அட்டூழியங்களில் ஒன்று நில அபகரிப்பிற்கு உட்பட்டமையாகும். உள்ளூர்த் தேசிய வளத்தின்மீது வன்னி மக்களுக்குரிய உரிமை பறித்தெடுக்கப்படுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இன்றைய வன்னிப் பிரதேசத்தில் அரச படைகள், தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம், வனவிலங்குத் திணைக்களம் என்பன பொதுமக்கள் காணிகளை அபகரித்து, சட்டவிரோத அதிகாரத்தை நிலை நாட்டிவருகிறது' என்று தெரிவித்தார்.

'கலைவளம் மிக்க வன்னிப் பிரதேசத்தின் வாய்மொழி வழக்காறுகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்' என்று திருமதி சுகந்தி தமிழ்வாணன் குறிப்பிட்டார்.

இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தன் 'நெடுங்கேணி இளங்கதிர் 2023' ஆண்டு மலரை மதிப்பீடு செய்து உரையாற்றுகையில், 'சிறந்த ஆய்வேடாகவும், குரலற்றோர் குரலாகவும், நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் செயற்பாட்டுத் தளமாகவும் திகழும் இம்மலர் பேராசிரியர் இர.சிவச்சந்திரன், கலாநிதி ச.பரமலிங்கம், கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி, நெடுங்கேணி சானுஜன், விமலா ரவீந்திரன், சுகந்தி தமிழ்வாணன் ஆகியோரின் தரமான ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்திருப்பது சிறப்புக்குரியது.

பின்தங்கிய பிரதேசம் ஒன்றின் மேம்பாட்டிற்காக பிரித்தானியா வாழ் நெடுங்கேணி மக்கள் காட்டிவரும் அக்கறை பாராட்டிற்குரியது. 'நெடுங்கேணி இளங்கதிர்' நெடுங்கேணிப் பிரதேசத்தின் வளங்கள், சூழல் பேணுகை, நிலப்பயன்பாடு, வாழ்க்கைத்தரம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பொருளாதாரக் கட்டுமானங்கள், வரலாறு, கலை, இலக்கியம் போன்ற அனைத்து அம்சங்களையும் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வரவேண்டும்' என்று தெரிவித்தார்.

# நான் எதற்கும் தயார்



பிரபு சாலமன் இயக்கிய கயல் படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர் ஆனந்தி. அந்தப் டத்தில் அவரது நடிப்பு பெரியளவில் பேசப்பட்டது. இதனையடுத்து, சண்டிவீரன்' திரிஷா இல்லைனா நயன்தாரா, விசாரணை, எனக்கு இன்னொரு பேரு இருக்கு, ரூபாய், மன்னர் வகையறா, ராவண கோட்டம் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இவர் 2021ஆம் ஆண்டில் சாக்ரடீஸ் என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. இந்தநிலையில், கயல் ஆனந்தி தனது கவர்ச்சி படங்களை சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இதுவரை குடும்ப பாங்கான கதாபாத்திரத்தில் மட்டுமே நடித்து வந்த அவர், தற்போது வெளியிட்டுள்ள கவர்ச்சி படங்கள் வைரலாக பரவி வருகின்றன. இதன்மூலம் கவர்ச்சியாக நடிக்கவும் தான் தயார் என்பதை கயல் ஆனந்தி சொல்லாமல் சொல்லியிருக்கிறார் என்று திரையுலகினர் தெரிவிக்கின்றனர்.

# அன்னபூரணிக்கு அள்ளி கொடுத்த இயக்குனர்



ஷாருக்கானின் ஜவான் படம் 300 கோடி பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக எடுக்கப்பட்ட நிலையில், நயன்தாராவுக்கு வழங்கப்பட்ட சம்பளத்துக்கு நிகராக லோ பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ள அன்னபூரணி படத்திற்கும் நடிகை நயன்தாரா சம்பளம் வாங்கியிருப்பதாக தகவல்கள் வெளயாகியுள்ளன. நடிகை நயன்தாரா சுமாராக ஒரு படத்துக்கு 8 கோடி முதல் 10 கோடி வரை சம்பளம் வாங்கி வருகிறார். அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் டபுள் ஆக்ஷன் ரோலில் நடித்த ஜவான் திரைப்படத்தில் நயன்தாராவுக்கு 11 கோடி சம்பளமும் ஃபிளாஷ்பேக் போர்ஷனில் இன்னொரு ஹீரோயினாக நடித்து அசத்திய தீபிகா படுகோனுக்கு 15 கோடி ரூபாய் சம்பளமும் கொடுக்கப்பட்டதாக பேச்சுக்கள் அடிபட்டன.

இந்நிலையில், படத்தின் பட்ஜெட்டே 10 கோடி கூட இருக்குமா? என்கிற சந்தேகம் கொடுக்கிற நயன்தாராவின் 75ஆவது படமான அன்னபூரணி படத்துக்கும் லேடி சூப்பர்ஸ்டாருக்கு 10 கோடி ரூபாய் சம்பளத்தை தொக்காக தூக்கி அந்த படத்தின் தயாரிப்பாளர் கொடுத்து இருப்பதாக அட்டகாசமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

டிசம்பர் 1ஆம் திகதி தமிழில் பல படங்கள் போட்டியாக வெளியாக உள்ள நிலையில், நயன்தாராவின் அன்னபூரணி படம் நயன்தாரா வாங்கி உள்ள சம்பளம் அளவுக்காவது சம்பாதிக்குமா? என்கிற கேள்வியும் எழுந்துள்ளது.

சமீபத்தில் சந்தானம் நடித்து வெளியான 80ஸ் பில்டப் படம் முதல் காட்சி கூட ஹவுஸ்ஃபுல் ஆகாத நிலையில், முதல் 2 நாளில் 2 கோடி வசூல் ஆகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# எச்சரிக்கை கொடுத்துள்ள நடிகை



பிரபல நடிகை ஸ்ரீதேவியின் மூத்த மகளான ஜான்வி கபூர் திரைப்படங்களில் பிஸியான நடிகையாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

தொடர்ந்து அவருக்கு பட வாய்ப்புகள் குவிந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முக்கியமான காரணம் அவரின் கவர்ச்சி என்று தெரிவிக்கப்படுகிறது.


அண்மையில் சிலர் ஜான்வி கபூரின் முகத்தை எடுத்து ஆடையின்றி இருக்கும் பெண்களின் வீடியோவில் இவருடைய முகத்தை பொருத்தி அந்த வீடியோவை இணைய பக்கங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் ஜான்வி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது, பெண்களை வைத்து இவ்வாறான இழிவான செயல்களை செய்ய வேண்டாம். இதுபோன்ற செயல்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சமீப காலமாக சினிமா நடிகைகள் மற்றும் இணைய பிரபலங்கள் பலரது முகத்தை இப்படி தவறான முறையில் எடிட் செய்து இணைய பக்கங்களில் பதிவேற்றும் ஆசாமிகளின் அட்டகாசம் தொடர்ந்து வருகிறது.

சமீபத்தில், நடிகை ராஷ்மிகா மந்தனா இப்படி ஒரு பிரச்சனையில் சிக்கினார். இது மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், இதற்கு பல்வேறு நடிகர்கள் கண்டனக் குரல்களை கொடுத்துள்ளனர்.

# இனி இதை செய்யவே மாட்டேன்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வரும் நடிகர் விஜய் சேதுபதி, இனி இந்த கதாபாத்திரங்களை செய்யவே மாட்டேன் என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். இதனால் அவர் மீண்டும் தன்னுடைய ரூட்டுக்கு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சின்ன சின்ன ரோலில் நடித்து வந்தவர் விஜய் சேதுபதி. கூத்து பட்டறையில் கணக்கு வழக்கு எழுதி வந்த விஜய் சேதுபதிக்கு இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் அறிமுகம் கிடைத்தது. அவர் நாளைய இயக்குநர் ரியாலிட்டி ஷோவில் இயக்கிய குறும்படங்களில் நடிக்க விஜய் சேதுபதிக்கு வாய்ப்பு கொடுத்தார்.

இதில் கொஞ்சம் கிடைத்த அறிமுகத்தினை வைத்து நடுவில கொஞ்சம் பக்கத்தை காணோம் படத்தில் நடித்தார். அப்படம் மிகப்பெரிய வெற்றி இல்லை என்றாலும் பலரிடத்தில் விஜய் சேதுபதியை கொண்டு சென்றது. இதை தொடர்ந்து பிட்சா படத்தின் மூலம் தானும் ஒரு நடிகன் என்பதை பதிய வைத்தார். ஒரே வருடத்தில் 4 படங்கள் வரை தொடர்ந்து நடித்து வந்தார் விஜய் சேதுபதி. நான் நடிக்க வந்து இருக்கேன். இது என் தொழில் என்பதை தன்னுடைய நிறைய பேட்டிகளில் சொல்வதை வழக்கமாக வைத்து இருந்தார். ஆனால், அவருக்கு ஹீரோ இமேஜ் கொடுத்த புகழை விட விக்ரம் வேதாவில் செய்த நெகட்டிவ் ரோல் மேலும் அங்கீகாரத்தினை கொடுத்தது.

இதை தொடர்ந்து ரஜினிக்கு வில்லனாக பேட்ட படத்திலும், விஜயிற்கு வில்லனாக மாஸ்டர் படத்திலும் நடித்தது விஜய் சேதுபதியின் கேரியரை தூக்கி கொடுத்தது. தொடர்ச்சியாக அவருக்கு நிறைய வில்லன் ரோலே வந்து கொண்டு இருந்தது. சமீபத்தில் ஜவான் படத்தில் கூட வில்லனாக நடித்துள்ளார்.

இந்நிலையில், சில படங்களின் ஹீரோக்கள் கேட்டுக்கொண்டதாலே வில்லனாக நடித்தேன். சிலர் நிறைய கட்டுப்பாடுகள் சொல்கின்றனர். ஹீரோவின் இமேஜை கெடுக்காமல் பார்க்க வேண்டும் என்கின்றனர். நிறைய வில்லன் ரோல் எடிட்டிங்கில் போய்விடுவதால் இனி வில்லனாக நடிக்க போவது இல்லை என விஜய் சேதுபதி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.













## உயர்தர, புலமைப்பரிசில் மாணவர்களுக்கான

# பாராட்டும் கௌரவிப்பும்

ஹட்டன், நோட்டன் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 2022/2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்கள், உயர்தரத்தில் சிறப்பு சித்தி பெற்ற மாணவர்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வுகள், ஹட்டன்-கார்பெக்ஸ் வித்தியாலயத்தின் வாசகர் வட்டத்தின் தலைவர் நோட்டன் ராம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் போராசிரியர் விஜயச்சந்திரன் , வைத்திய கலாநிதி வசந்தராஜா, மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ராஜாராம், ஹட்டன் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவகுமார், கொத்மலை கல்வி வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி இங்கர்சால், கண்டி கல்வி வலயம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ரமேஸ்பாபு, கம்பளை கல்வி வலயம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உமேஸ்நாதன், ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் ஐ.எப்.ஓ நிறுவனத்தின் முகாமையாளர் விக்னேஸ்வரன், உட்பட அதிபர்களான வில்சன், சிவானந்தராஜா, சந்திரகுமார், ஜேம்ஸ் விக்டர், ரவிச்சந்திரன், சிவபிரகாசம் மற்றும் கங்கேவத்த தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் யுகேஸ்வரன் ஆகியோருடன் , ஆசிரியர்கள், பெற்றோர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோட்டன், காசல்ரீ பாடசாலைகளில் கல்விக் கற்று பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் உட்பட உயர்தரத்தில் சித்தி பெற்ற 31 மாணவர்கள் , புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 11 மாணவர்கள் என அனைவருக்கும் பதக்கம் அணிவித்து சான்றிதழ், அப்பியாச கொப்பிகள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், கற்பித்த ஆசிரியர்கள் ,அதிபர்கள் பெற்றோர்களினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- எம்.கிருஸ்ணா





































# எரிமலை வெடிப்பில் 11 பேர் பலி



மேற்கு இந்தோனேசியாவில் எரிமலை வெடித்ததில் குறைந்தது மலையேறுபவர்கள் 11 பேர் உயிரிழந்துள்ளதாக உள்ளூர் மீட்பு அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

மேற்கு இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் உள்ள 2,891 மீட்டர் (9,484 அடி) உச்சியில் இருக்கும் மராபி மலையில் இருக்கும் எரிமலை வெடித்து 3,000 மீட்டர் உயரம் வரை புகை மண்டலமாக காட்சியளித்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மராபி மலையில் ட்ரெக்கிங் மேற்கொண்ட அதாவது மலை ஏறுபவர்கள் 26 பேர் சிக்கியதாக கூறப்படுகிறது. அவர்களில் 14 பேரை கண்டுபிடித்துள்ளதாகவும், அதில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பாடாங் தேடல் மற்றும் மீட்பு அமைப்பின் தலைவர் அப்துல் மாலிக் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த மலையில் மொத்தமாக 75 பேர் இருந்ததாகவும் அதில், 12 பேர் கண்டுப்பிடிக்கப்படவில்லை எனவும், அவர்களை தீவிரமாக தேடி வருவதாகவும், 49 பேர் கீழே இறங்கிவிட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# வீடுக்கு ஒரு விமானம் வைத்திருக்கும் கிராமம்



முந்தைய காலத்தில் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு செல்ல கால்நடையாகவும் மாட்டு வண்டிகளிலும் சென்று வந்தனர். நாளடைவில் பொது போக்குவரத்து, சைக்கிள், முச்சக்கரவண்டி, கார் என போக்குவரத்து வாகனங்கள் அதிகரித்து வருகின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் சைக்கிள் இருந்த காலம் போய் டூவிலர்கள் வந்தன. தற்போது அவையும் போய் கார்களின் பயன்பாடு அதிகரித்து விட்டது. காற்று மாசு, போக்குவரத்து பாதிப்பு என இருந்தாலும் அதை பற்றியெல்லாம் கவலைப்படாமல் சொகுசாக காரில் பயணிப்பதையே பலரும் விரும்புகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கேமரூன் ஏர்பார்க் என்ற கிராமத்தில் மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்காக விமானத்தை பயன்படுத்தி வருகின்றார்கள்.

இந்த கிராமத்தில் வேலைக்கு செல்லவும் அலுவலகத்திற்கு செல்லவும் விமானத்தில்தான் பயணிக்கிறார்களாம். அந்த தெருவை கழுகு பார்வையில் பார்த்தால் விமான நிலையம்போல் காட்சியளிக்கிறது.

இந்த கேமரூன் ஏர்பார்க்கில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ஓய்வு பெற்ற விமானிகளாக இருக்கிறார்கள். விமானம் வைத்திருக்க விமானிகளுக்கான லைசன்ஸ் மற்றும் விமானத்தை இயக்குவது குறித்த விவரங்களை தெரிந்தவர்கள் மட்டுமே விமானம் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை தவிர வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை.

இவர்களுடன் மருத்துவர்கள், பொறியாளர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட மக்களும் வசித்து வருகிறார்கள்.

இந்த கிராமம் 1963ஆம் ஆண்டு கட்டமைக்கப்பட்டது. இங்கு மொத்தம் 124 வீடுகள் உள்ளன. விமானங்களை தங்கள் வீடுகளுக்கு முன்பாக தரையிறக்கவும் அருகில் உள்ள விமான நிலையத்திற்கு எளிதாக செல்லவும் 100 அடி அகலத்திற்கு வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா, விமானங்களின் செயல்பாட்டை ஊக்குவித்தது. இந்த நிலையில்தான் இந்த விமான நிலையங்களை ஓய்வு பெற்ற இராணுவ விமானிகளுக்கான குடியிருப்பு விமான பூங்காவாக மேம்படுத்த அந்த நாட்டின் விமான போக்குவரத்து ஆணையம் நடவடிக்கை எடுத்தது. இதனால்தான் கேமரூன் ஏர்பார்க் கிராமத்தில் வீட்டிற்கு ஒரு விமானம் வைத்திருக்கிறார்கள்.

உக்ரேன்

# முன்னாள் ஜனாதிபதிக்கு வெளியேற தடை



உக்ரேன்-ரஷ்யா போர் நடைபெற்று வரும் நிலையில், உக்ரேன் முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ (வயது 58) வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடிவு செய்தார். இந்த சுற்றுப்பயணத்தின்போது, அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் மைக் ஜான்சனை சந்திக்கவும், போலந்து பாராளுமன்றத்திற்கு செல்லவும் திட்டமிட்டிருந்தார். அதன் பின்னர் ஹங்கேரி பிரதமர் விக்டர் ஆர்பனை சந்திக்க முடிவு செய்ததாகவும் தகவல் வெளியானது. ரஷ்ய ஜனாதிபதி புட்டினை, ஹங்கேரி பிரதமர் ஆர்பன் பாராட்டியதோடு, ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவதற்கான உக்ரேன் அரசின் முயற்சியை ஆதரிக்க மறுத்துள்ளார். இதனால் உக்ரேன் அரசு அவர் மீது அதிருப்தியில் உள்ளது.

இந்நிலையில், உக்ரேனில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (03) பெட்ரோ போரோஷென்கோ புறப்பட்டபோது, எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

ஹங்கேரி பிரதமரை சந்திக்க திட்டமிட்டதால் முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற அனுமதி இருந்தும் தன்னை திருப்பி அனுப்பியதாகவும், எல்லையில் தனக்கு நேர்ந்தது, ஒற்றுமை மீதான தாக்குதல் என்றும் போரோஷென்கோ கூறினார். ஆனால், ஹங்கேரி பிரதமர் ஆர்பனை சந்திக்கத் திட்டமிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

உக்ரேன் இராணுவ சட்டத்தின்படி, 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண்கள் சிறப்பு அனுமதி பெறாவிட்டால் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை

# 14 சுரங்கப்பாதைகள் மூடப்பட்டன



மிக்ஜாம் புயல் காரணமாக சென்னையில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. வீதிகளில் மழை வெள்ளம் குளம் போல் தேங்கியுள்ளது. தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் மழைநீர் வடிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மாம்பலம், கோடம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் சென்னை பெருநகர காவல்துறைக்கு உட்பட்ட மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் கணேசபுரம், கொங்கு ரெட்டி, பெரம்பூர், வில்லிவாக்க், ரங்கராஜபுரம், அரங்கநாதன், துரைசாமி உள்ளிட்ட 14 சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளன.




அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரை

# 4-1 எனக் கைப்பற்றிய இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை 4-1 என இந்தியா கைப்பற்றியது.

பெங்களூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற, ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 4-1 என்ற ரீதியில் தொடரை இந்தியா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

இந்தியா: 160/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் 53 (37), அக்ஸர் பட்டேல் 31(21), ஜிதேஷ் ஷர்மா 24 (16), யஷஸ்வி ஜைஸ்வால் 21 (15) ஓட்டங்கள். பென் டோர்ஷிஸ் 2/30 [4], ஆரோன் ஹார்டி 1/21 [4], தன்வீர் சங்கா 1/26 [4])

அவுஸ்திரேலியா: 154/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பென் மக்டர்மூட் 54 (36), ட்ரெவிஸ் ஹெட் 28 (18), மத்தியூ வேட் 22 (15), டிம் டேவிட் 17 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: முகேஷ் குமார் 3/32 [4], ரவி பிஷ்னோய் 2/29 [4], அக்ஸர் பட்டேல் 1/14 [4])

போட்டியின் நாயகன்: அக்ஸர் பட்டேல்

தொடரின் நாயகன்: ரவி பிஷ்னோய்

மன்னார் பிறீமியர் லீக்:

# சம்பியனான அயிலன்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கால் மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் அயிலன் கால்பந்தாட்டக் கழகம் சம்பியனானது. மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏ.கே.ஆர் கால்பந்தாட்டக் கழகத்தை வென்று அயிலன் சம்பியனானது.

சம்பியனான அயிலனுக்கு 10 இலட்சம் ரூபாயும், இரண்டாமிடத்தைப் பெற்ற ஏ.கே.ஆருக்கு 5 இலட்சம் ரூபாயும் பணப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.







கொழும்பு இசிப்பத்தான கல்லூரியை

# வென்ற மல்வானை அல் முபாறக்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவு இரண்டு மைலோ கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில், கொழும்பு இசிப்பத்தான கல்லூரியுடனான போட்டியில் மல்வானை அல் முபாறக் தேசிய கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.




முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# இங்கிலாந்தை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்



இங்கிலாந்துக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், அன்டிகுவாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜொஸ் பட்லர், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பில் ஸோல்டின் 45 (28), வில் ஜக்ஸின் 26 (24), ஸக் குறோலியின் 48 (63), ஹரி ப்றூக்கின் 71 (72), சாம் கர்ரன் 38 (26), பிறைடன் கார்ஸின் ஆட்டமிழக்காத 31 (21) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 325 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில், குடகேஷ் மோட்டி, ஒஷேன் தோமஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு 326 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், அணித்தலைவர் ஷே ஹோப்பின் ஆட்டமிழக்காத 109 (83), றொமாரியோ ஷெப்பர்ட்டின் 48 (28), அலிக் அதனாஸேயின் 66 (65), பிரண்டன் கிங்கின் 35 (44), ஷிம்றோன் ஹெட்மயரின் 32 (30) ஓட்டங்களோடு 48.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், றெஹான் அஹ்மட், குஸ் அட்கின்ஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், லியாம் லிவிங்ஸ்டோன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப்போட்டியின் நாயகனாக ஹோப் தெரிவாகினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 05, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.